# சுந்தர சண்முகனார் நூற்றாண்டு கருத்தரங்கம் சாகித்திய அகாடமி சார்பில் நடைபெற்றது




புதுச்சேரி, ஜூலை.9–

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் சாகித்திய அகாடமி சார்பில், சுந்தர சண்முகனார் நூற்றாண்டு இலக்கியக் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில், சாகித்திய அகாடமியின் பொதுக்குழு உறுப்பினர் எழுத்தாளர் பூபதி பெரியசாமி வரவேற்றார்.

சாகித்திய அகாடமி ஆலோசனை குழு உறுப்பினர் பேராசிரியர் முருகையன் தலைமையுரை ஆற்றினார். முனைவர் வேல்முருகன் எழுதி சாகித்திய அகாடமி பதிப்பாக்கம் செய்துள்ள "சுந்தர சண்முகனார்" என்ற நூலை, புதுச்சேரி அரசு கலை பண்பாட்டு துறை இயக்குனர் கலியபெருமாள் வெளியிட, புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டுக் குழுமத்தின் உறுப்பினர் பேராசிரியர் ராமானுஜம் பெற்றுக்கொண்டார்.

இக்கருத்தரங்கில் சுந்தர சண்முகனாரின் பாட்டிலக்கியம் என்ற தலைப்பில் முனைவர் வேல்முருகன், சுந்தர சண்முகனாரின் சிறுகதைகள் என்ற தலைப்பில் பேராசிரியர் ஏழுமலை, சுந்தர சண்முகனாரின் வரலாற்று நூல்கள் என்ற தலைப்பில் பேராசிரியர் வேல் கார்த்திகேயன், சுந்தர சண்முகனாரின் சிறுவர் இலக்கியம் என்ற தலைப்பில் பேராசிரியை லட்சுமி தத்தை ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

பேராசிரியர் ஆனந்தன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க, நிகழ்ச்சி முடிவில் பேராசிரியர் சிலம்பு செல்வராசு நன்றி கூறினார்.